## டாரட் பிர்சன்ன ஆரூட முறையின் வரலாறு

பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசியில் க்ரிப்டோமன்சி **(Cryptomancy)** என்னும் சீட்டுக்கட்டை வைத்து பிரசன்ன ஆரூட பலன் கூறும் முறை எகிப்து நாட்டிலும் மற்றும் கப்பாலா **(Kabbalah)** எனும் தீர்க்கதரிசன முறை யூத நாட்டிலும் ஆரூட பலன் கூறப்பட்டு வந்தது.

ஆர்தர் எட்வர்ட் வயிட் என்னும் ஆங்கில கவிஞர் மற்றும் ஜோதிடம் எனும் மறைமுக கலைகளில் தேர்ந்தவர் எகிப்து மற்றும் உலகின் பிற நாடுகளின் ஆன்மீக தெய்வங்கள், தேவதைகள் மற்றும் குறியீடுகளை அடிப்படையாக வைத்து ஏற்கனவே சீட்டு கட்டுகளை அடுப்படையாக வைத்து பலன் கூறும் முறையை இணைத்து சீட்டு கட்டுகளைப் போலவே டாரட் துருப்பு சீட்டுகளை உறுவாக்க பமீலா கோல்மன் ஸ்மித் எனும் ஓவியரை தொடர்பு கொண்டு தன் மனதில் உதித்த கற்பனை வடிவங்களை செயல்முறை படுத்தக்கூறி அதை 78 துருப்புச் சீட்டுகளாக வரைந்து சீட்டுகட்டு போல் உருவாக்கினார். அந்த துருப்புச் சீட்டுகள் ரைடர் ஆர்த்தர் வைட் டாரட் துருப்புச்சீட்டுகள் என்று இன்றுவரை அணைவராலும் அழைக்கப்படுகிறது.



ஆர்த்தர் எட்வர்ட் வைட்



பமீலா கோல்மன் ஸ்மித்

**டாரட் துருப்புச்சீட்டின் பிரிவுகள்:**

டாரட் துறுப்புச் சீட்டு கட்டு மொத்தம் 78 துருப்புச் சீட்டுக்கள் அடக்கியது. அந்த துருப்புச் சீட்டுகளானது இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை

1. **முதன்மை துருப்புச் சீட்டுகள்**
2. **துணை துருப்புச் சீட்டுகள்**

**1. முதன்மை துருப்புச் சீட்டுகள்:**

பிரபஞ்சத்திலிருந்து நேரடியாக பூமிக்கு வரும் முக்கிய செய்திகளை முதன்மை துருப்புச்சீட்டுகள் பலன் கேட்க்கவந்தவருக்கு பலன்களாக வெளிப்படுத்தும். முதன்மை துருப்புச் சீட்டுகளானது 22 சீட்டுகளை உள்ளடக்கியது. அவை முறையே

0. வெகுளி
1. மந்திரவாதி
2. உயர்நிலைப் பெண்துறவி
3. பேரரசி
4. பேரரசர்
5. மத குரு
6. காதலர்கள்
7. ரதம்
8. சக்தி
9. துறவி
10. அதிர்ஷ்ட சக்கரம்
11. நீதி
12. தியாகி
13. மரணம்
14. சமநிலைப்படுத்தும் தேவதை
15. சாத்தான்
16. இடிந்த கோபுரம்
17. நட்சத்திரம்
18. சந்திரன்
19. சூரியன்
20. இருதித் தீர்ப்பு

மற்றும்

21. உலகம்

2. **துணை துருப்புச் சீட்டுகள்:**

துணை துருப்புச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை 56. அவை மேலும் நான்கு சமபிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொறு பிரிவும் 14 துருப்புச் சீட்டுகளைக் கொண்டது. இந்த நான்கு பிரிவுகளும் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. **மரக்கோள்கள் (Wands)** – க்ளப்ஸ் / க்ளாவர் என்று சீட்டுகட்டில் குறிப்பிடுவார்கள்.
2. **கோப்பைகள் (Cups)** – ஹார்ட்ஸ் / ஹார்டின் என்று சீட்டுக்கட்டில் குறிப்பிடுவார்கள்.
3. **வாள்கள் (Swords)** – ஸ்பேட்ஸ் என்று சீட்டுக்கட்டில் குறிப்பிடுவார்கள்.
4. **நாணயங்கள் (Pentacles)** – டைமண்ட்ஸ் என்று சீட்டுக்கட்டில் குறிப்பிடுவார்கள்.

ஒவ்வொறு பிரிவிலுள்ள 14 துருப்புச் சீட்டுகளும் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை

1. **எண் துருப்புச் சீட்டுகள்**
2. **அரசவை துருப்புச் சீட்டுகள்**

எண் துருப்புச் சீட்டுகள் எண் 1 முதல் எண் 10 வரை பத்து துருப்புச் சீட்டுகளும். அரசவை துருப்புச் சீட்டுகளான அரசனின் அவையை அலங்கரிக்கும் **சேவகி**, **போர்வீரன்**, **அரசி** மற்றும் **அரசன்** ஆகிய நான்கும் அரசவை துருப்புச் சீட்டுகள் என்று அழைக்கப்படுகறது. இங்கு 1ஆம் எண் துருப்புச் சீட்டு **ஏஸ்** (ACE) அல்லது **ஆஸ்** என்று அழைக்கப்படுகிறது.

**டாரோ துருப்புச் சீட்டுகளும் பஞ்சபூதங்களும்:**

இருபத்திஇரண்டு முதன்மை துருப்புச் சீட்டுகள் பஞ்சபூதத்தில் ஆகாயத்தத்துவத்தையும், மரக்கோள்கள் நெருப்பு தத்துவத்தையும், கோப்பைகள் நீர் தத்துவத்தையும். வாள்கள் காற்று தத்துவத்தையும், நாணயங்கள் நில தத்துவத்தையும் குறிக்கும்.

**துணை டாரோ துருப்புச் சீட்டுகள் சுட்டிக்காட்டும் முக்கிய அம்சங்கள்:**

1. **மரக்கோள்கள்:**

   கருத்துக்கள், ஆற்றல் மற்றும் சக்தி, ஆன்மீகம், உத்வேகம், உள்ளுணர்வு மற்றும் கற்பனை வளம்.

2. **கோப்பைகள்:**

   உறவுகள், உணர்வுகள், இதயபூர்வமான எண்ணங்கள், உணர்ச்சிகள், அன்பு, காதல் உணர்வு, பற்று மற்றும் பாசம்

3. **வாள்கள்:**

   பகுத்தறிவு, ஆட்சி மற்றும் அதிகாரம், அறிவு, தைரியம், செயல், மோதல், போர், எதிரி, புத்திக்கூர்மை அறிவுப்பூர்வமான எண்ணங்கள்.

4. **நாணயங்கள்:**

   தனம், சொத்துக்கள், பொருளாதாரம், உடைமைகள், இல்லுலக பற்று, வேலை வியாபாரம் மற்றும் தொழில்.

**டாரோ அட்டைகள் சுட்டிக்காட்டும் பஞ்சபூத ராசிகள்:**

1. மரக்கோள்கள் சுட்டிக்காட்டும் நெருப்பு தத்துவ ராசிகளான மேஷம், சிம்மம் மற்றும் தனுசு.
2. நாணயங்கள் சுட்டிக்காட்டும் நில தத்துவ ராசிகளான ரிஷபம், கன்னி மற்றும் மகரம்.
3. வாள்கள் சுட்டிக்காட்டும் காற்று தத்துவ ரசிகளான மிதுனம், துலாம் மற்றும் கும்பம்.
4. கோப்பைகள் சுட்டிக்காட்டும் நீர் தத்துவ ராசிகளான கடகம், விருச்சிகம் மற்றும் மீனம்.

**டாரோ துருப்புச் சீட்டு கட்டும் சுத்திகரிப்பும்:**

டாரோ துருப்பு சீட்டுகளை வாங்கியபின் சுத்திகரிப்பு செய்தபின்பே பலன்கூற பயன்படுத்தவேண்டும்.

பயன்படுத்த ஆரம்பித்தப்பிறகு வாரம் ஒருமுறையாவது சுத்தப்படுத்துவது மிகவும் சிறந்தது. ஏன் என்றால் நாம் பலன்கூற

*ஆரம்பித்தவுடன் சில நேர்மறை சக்திகளும் சில எதிர்மறை சக்திகளும் அட்டைகளில் படிந்துகொண்டேவரும். எதிர்மறை சக்திகளை அட்டைகளில்லிருந்து நீக்குவதற்கு டாரோ அட்டைகள் சில முறைகளில் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. அப்படி சுத்திகரிப்பு செய்யும் முறைகளை பற்றி கீழே காண்போம்.*

## டாரோ அட்டைகளை சுத்திகரிப்பு செய்யும் முறைகள்:

### 1. உப்பு நீரை கொண்டு செய்யும் சுத்திகரிப்பு:

*ஒரு கோப்பையில் சிறிது கல் உப்பை எடுத்துக்கொண்டு உப்பு மூழ்கும் அளவிற்கு நீர் ஊற்றி அந்த கரைசல் அருகில் டாரட் அட்டைகளை வெல்வெட் துணியில் பரப்பி, அட்டைகளின் மேல் பென்சில் படிக கல்லை கொண்டு மூன்று சுற்று சுத்தி உப்புக்கரைசலில் தெளிக்க வேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும். அந்த உப்புக்கரைசலை கழிப்பறையில் ஊற்றிவிட வேண்டும்.*

### 2. பௌர்ணமி ஒளியில் செய்யும் சுத்திகரிப்பு:

*பௌர்ணமி அன்று இரவு 7:00 மணிக்கு பின் பௌர்ணமி நிலவு ஒளியில் டாரட் அட்டைகளை வெல்வெட் துணியில் பரப்பி முழு இரவு வைத்து சூரிய உதயத்திற்கு முன் எடுத்துவிட வேண்டும்.*

### 3. சாம்பல் நிற மேகம் சுத்திகரிப்பு:

*ஒரு கோப்பையில் சிறிது கல் உப்பை எடுத்துக்கொண்டு உப்பு மூழ்கும் அளவிற்கு நீர் ஊற்றி அந்த கரைசல் அருகில் டாரட் அட்டைகளை வெல்வெட் துணியில் பரப்பி, அதன் மீது சாம்பல் நிற மேகம் படர்ந்து இருப்பது போல் கற்பனை செய்து, அந்த மேகங்களை கைகளால் ஒன்று சேர்த்து கல் உப்புக்கரைசலில் கொட்டுவது போல் பாவனை செய்ய வேண்டும். மூன்று முறை செய்ய வேண்டும். அந்த உப்புக்கரைசலை கழிப்பறையில் ஊற்றிவிட வேண்டும்.*

***4. சூரிய ஒளியில் சுத்திகரிப்பு:***

*சூரிய உதயத்திற்கு பின் சூரியஒளிபடுமாறு டாரட் அட்டைகளை வெல்வெட் துணியில் பரப்பி பகல் முழுவதும் வைத்து சூரிய அஸ்தமனத்திற்கு முன் எடுத்துவிட வேண்டும்.*

***5. தூப சுத்திகரிப்பு:***

*சாம்பிராணி மற்றும் ஊதுபத்தி புகையை டாரட் துருப்புச்சீட்டுகள் மீது காண்பிக்கலாம். சாம்பிராணி உள்ள கலனை கீழே வைத்து டாரட் துருப்புச்சீட்டுகளை சாம்பிராணி புகைபடுமாறு கைகளில் பிடித்து கலக்க (Shuffle) வேண்டும்.*

## முதன்மை டாரட் துருப்புச்சீட்டுகளும் அதன் விளக்கங்களும் நேர் மற்றும் தலைகீழாக வருவதால் பலன்களும்:

### 0. வெகுளி:




வெகுளி ஒரு பயம் அறியாத பயணி. அவர் முன் யோசனை இல்லாமலேயே பேசிவிடுபவர்.

நேர்மறை பலன்:

அப்பாவித்தனம், முட்டாள்தனம், வெகுளித்தனம், பயமற்ற, புதிய தொடக்கம், மகிழ்ச்சி, சந்தோஷம், தன்னிச்சையான செயல்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடையது.

தலைகீழ் பலன்:

யோசனையற்ற, முதிர்ச்சியற்ற மனது, மனகிழற்சியுடைய, பொறுபற்ற தன்மை, சட்டத்திற்கு புறம்பான செயல் ஆகியவற்றுடன் தொடர்புடையது.

### 1. மந்திரவாதி:




மந்திரவாதியானவர் உணர்ச்சிவசபடாத அபரிமிதமான ஆற்றலுடன் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் ஒரு இலட்சியவாதி.

நேர்மறை பலன்:

ஆற்றல், செயல் திறன், செயல்படுத்துவது, வளம், அறிவு கூர்மை, மன உறுதி, நம்பிக்கை, குறிக்கோள், லட்சியம், மனஉறுதி, நம்பிக்கை, தனித்தன்மை, மனநிறைவு, புதிய தொடக்கங்கள், உள்ளே பொதிந்திருக்கும் ஆற்றல் மற்றும் திறமை ஆகியவற்றுடன் தொடர்புடையது.

தலைகீழ் பலன்:

தந்திரம், ஏமாற்று, இரக்கமின்மை, கவனமின்மை, அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றுடன் எதிர்மறையாக தொடர்புடையது.

**2. உயர்நிலைப் பெண்துறவி:**




இரகசியமான மறைமுககலைகளின் பாதுகாவலர். தான் பெற்ற ஆன்மீக ஞான ரகசியங்களை சரியான சமயத்தில் வெளிபடுத்தும் ஆற்றலுடையவர்.

நேர்மறை பலன்:

நேர்மறையானது உள்ளுணர்வு, புரிதல், ஞானம், ஜோதிடம் மற்றும் அமானுஷ்ய கலைகளில் ஞானம், மனநல திறன் மற்றும் தெய்வீக பெண் ஆகியவற்றோடு தொடர்புடையது.

தலைகீழ் பலன்:

தாய்மை அடையமுடியாத நிலை, பாதுகாப்பற்ற மனநிலை, இரகசிய செயல்பாடுகள், மற்றும் மறைமுக தடைகள் அல்லது மறைமுக எதிரிகள்.

**3. பேரரசி**:




பேரரசி காதல் மற்றும் அன்பின் கருவியாகும், கருவுறுதலும் தாய்மைக்கும் அதிகாரம் மிக்கவர். இவர் இரக்ககுணம் மற்றும் பற்றுதலை பிரதிபலிக்கிறார்.

நேர்மறை பலன்:

கருவுறுதல், பிறப்பு, தாய்மை, ஒற்றுமை, இயல்பு, செழிப்பு, வளமை, மகிழ்ச்சி, அன்பு மற்றும் கலைநயம், ஆகியவற்றோடு தொடர்புடையது.

தலைகீழ் பலன்:

நாட்டில் ஏற்படும் புரட்சி, உணர்ச்சி ரீதியிலான அச்சுறுத்தலுடன், பாதுகாப்பற்ற மனநிலை, வறுமை, கருவுறாமை, தேவையற்ற கர்ப்பம் மற்றும் ஆகியவற்றோடு தொடர்புடையது.

### *4.* பேரரசர்




பேரரசர் சாதனை மற்றும் கௌரவத்தின் அடையாளம். அவர் தந்தை மற்றும் வலுவான தலைமைத்துவத்தை பிரதிபளிக்கிறார்.

நேர்மறை பலன்:

சாதகமாக, சாதகமான, பாதுகாப்பு, ஆதரவு, நம்பகத்தன்மை, ஒழுக்கம்,
வழங்குநர், ஒருங்கிணைப்பு, காரணம், மற்றும் மனவளர்ச்சி.

தலைகீழ் பலன்:
பலவீனத்துடன், முதிர்ச்சியுடன், தோல்வியுற்ற குறிக்கோளுடன், நிலை உந்துதல், கொடுங்கோலன், மற்றும் ஒரு தாங்க முடியாத தன்மை ஆகியவற்றோடு தொடர்புடையது.

### 5. மதகுரு




மதகுரு ஒரு நல்ல ஆலோசகரும் ஆன்மீக வழிகாட்டியும் ஆவார்.

நேர்மறை பலன்:

ஆலோசனை, அறிவுரை, அறிவு, ஞானம், ஆன்மீக தொடர்பு, நம்பிக்கை, பாரம்பரிய மரபுகள் ஆகியவற்றோடு தொடர்புடையது.

தலைகீழ் பலன்:

தவறான தகவல், நம்பிக்கை இல்லாமை, துரோகம், கெட்ட ஆலோசனை, குழப்பம் ஆகியவற்றோடு தொடர்புடையது.

***6. காதலர்கள்***




*வாழ்கையின் புதிய பரிமாணத்தையும் அன்பையும் காதலையும் பக்தியையும் ஆன்மீக நட்புகளையும் குறிக்கும்.*

*நேர்மறை பலன்:*

*ஆசைகள், விருப்பம், புதிய காதலன் அல்லது காதலி, உறவுகள், உடல் ஈர்ப்பு, அன்பு, காமம், புதிய உறவுக்குள் தன்னை இணைத்துக்கொள்ளுதல்.*

*தலைகீழ் பலன்:*

*காதல் தோல்வி, பிரிவினை, தகாத உறவு (மறைமுக உறவு) மற்றும் காதலில் பிரச்சனைகளை குறிக்கும்.*

***7. ரதம்***




*மோதல் மற்றும் வெற்றியை ரதம் துருப்புச்சீட்டு சுட்டிக்காட்டுகிறது. இது உங்களை விரைவான முன்னேற்றத்தை குறிக்கும்.*

*நேர்மறை பலன்:*

*வெற்றி, இயக்கம், மாற்றம், தன்னம்பிக்கை, உறுதியான தன்மை, மற்றும் நல்ல செய்தித்தொடர்பை சுட்டிக்காட்டுகிறது.*

*தலைகீழ் பலன்:*

*ஆத்திரம், கொடுங்கோன்மை, மிதமிஞ்சிய ஈகோ, சுயநலம், திமிர், தாமதங்கள் மற்றும் ஏமாற்றத்துடன் தொடர்புடையது.*

## 8. சக்தி




சூழ்நிலைக்கு தக்கவாறு மனம், உடல் மற்றும் ஆன்மீக பலத்தை பிரதிபலிக்கிறது.

நேர்மறை பலன்:

ஆற்றல், மனவலிமை, மனநிறைவு, இரக்கம், பொறுமை, தைரியம், வெற்றி, உடல் பலம் ஆகியவற்றோடு தொடர்புடையது.

தலைகீழ் பலன்:

இழப்பீடு, அச்சம், நிலைமாற்றம், தோல்வி மற்றும் வாய்ப்பு இழப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையது.

## 9. துறவி




துறவி ஒரு தனித்த நபராகும், மற்றவர்களிடமிருந்து விலகியிருக்க கூடியவர். தனக்குள்ளேயே விடை தேட முயற்சிப்பவர்.

நேர்மறை பலன்:

தனிமை அல்லது துறவு செல்வதற்கான நேரம் வந்ததை குறிக்கிறது, அமைதி. தணிக்கை, தனிமை, வழிகாட்டல், அறிவுரை மற்றும் பொறுமை ஆகியவற்றோடு தொடர்புடையது.

தலைகீழ் பலன்:

பிடிவாதம், முரண்பாடு, சந்தேகம், பயம், பொறுமையில்லாத, முட்டாள்தனம், மற்றும் அகந்தை ஆகியவற்றோடு தொடர்புடையது.

### 10. அதிர்ஷ்ட சக்கரம்




அதிர்ஷ்ட சக்கரமானது ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தை சுட்டிக்காட்டுகிறது. வாழ்க்கையின் சீரற்ற சுழற்சியை சுட்டிக்காட்டுகிறது.

நேர்மறை பலன்:

விதி, இயக்கம், குறிக்கோள், நல்ல அதிர்ஷ்டம், புதிய வாழ்க்கை சுழற்சி மற்றும் ஒத்திசைவு ஆகியவற்றோடு தொடர்புடையது.

தலைகீழ் பலன்:

தடைகள், தற்காலிக துரதிர்ஷ்டம் மற்றும் விரும்பத்தகாத ஆச்சரிய நிகழ்வுகள் ஆகியவற்றுடன் தொடர்புடையது.

### 11. நீதி




இந்த அட்டை நீதி, நேர்மை மற்றும் சமநிலையை குறிக்கிறது. இது இரு நபர் கூட்டு விவகாரங்கள் மற்றும் சட்ட விவகாரங்களுக்கு பொறுப்பு வாய்ந்தது.

நேர்மறை பலன்:

நீதி, சத்தியம், ஒருமைப்பாடு, சமநிலை, நடுனிலை, உண்மை, நடுவர், ஒருமைப்பாடு, பொறுப்பு, நேர்மை ஆகியவற்றோடு தொடர்புடையது.

தலைகீழ் பலன்:

பாராபட்சம், தீமை, அநீதி, சாதகமற்ற தீர்ப்பு, ஒருதலைபட்சம், தவறான அறிவுரை, நியாயமற்ற தீர்ப்பு ஆகியவற்றோடு தொடர்புடையது.

### *12. தியாகி*




தொங்கவிடப்பட்ட மனிதன் சுய தியாகம் மற்றும் அறியாத மனதை அடையாளப்படுத்துகிறான். அவர் சூழ்நிலை கைதியாக செய்யப்படும் குருட்டு தியாகத்தை (பலி) வெளிபடுத்துகிறார்.

நேர்மறை பலன்:

மாற்றம், நெகிழ்வு, வளைந்து கொடுத்து செல்வது, மறுபிறப்பு, விடுதலை, வெளியீடு ஆகியவற்றோடு நேர்மறையாக தொடர்பு பெற்றுள்ளது.

தலைகீழ் பலன்:

பொருள் பற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டது, மிகைபடுத்தப்பட்ட அகங்காரம் (ஈகோ), மனோபலம் இல்லாதது, எளிதில் மற்றொருவரின் ஆதிக்கத்தின் கீழ் சென்றுவிடுவது மற்றும் உயிர் தியாகிகம் ஆகிய வற்றுடன் தொடர்பு பெற்றுள்ளது.

### *13. மரணம்*




மரண துருப்புச்சீட்டானது ஒரு நிலையிலிருந்து விடுபட்டு மற்றொரு புதிய நிலைக்கு மாறுவதை சுட்டிக்காட்டுகிறது. முடிவு மற்றும் தொடகத்தை முழுமையாக சுட்டிக்காட்டுகிறது.

நேர்மறை பலன்:

முடிவு, உருமாற்றம், அகற்றுதல், மரணத்திற்கு நிகராண மிகப்பெரிய மாற்றத்தை சுட்டிக்காட்டுகிறது.

தலைகீழ் பலன்:

தேக்க நிலை, தேங்கி கிடப்பது, வாய்ப்பை இழத்தல், நட்பை இழத்தல், மாற்றத்தைக் கண்டு பயப்படுதல்.

### *14. சமநிலைப்படுத்தும் தேவதை*




*இந்த துருப்புச்சீட்டானது சுயகட்டுப்பாட்டையும் அசாதாரண சூழ்நிலை மற்றும் மன உணர்வுகளை கையாளக்கூடிய நிலையை சுட்டிக்காட்டுகிறது.*

*நேர்மறை பலன்:*

*நல்லிணக்கம், நல்ல உடல்நிலை, நடு நிலை, சீரான நிலை, சமரசம் மற்றும் சமாதானம், அமைதி, சுயக்கட்டுப்பாடு ஆகியவற்றோடு நேர்மறையாக தொடர்பு பெற்றுள்ளது.*

*தலைகீழ் பலன்:*

*தாங்கிக்கொள்ள முடியாத, பொருத்துக்கொள்ள முடியாத, பொருமையற்ற, தொலைநோக்கு பார்வையற்ற, மதிநுட்பத்தை இளந்த நிலை, முரண்பாடு, மோதல், சண்டை, விரோதம், சச்சரவு, விவாதம், உள்நாட்டு கலவரம், குடும்பத்தில் அமைதியற்ற நிலை ஆகியவற்றோடு தொடர்பு பெற்றுள்ளது.*

### *15. சாத்தான்*




*சாத்தான் துருப்புச்சீட்டு சிற்றின்ப உணர்ச்சிகளின் மொத்த வடிவமாக இருக்கிறது. அனைத்துவகை இல்லுலக ஆசைகளையும் சாத்தியபட வைக்கும். கட்டுக்கடங்கா இச்சைகளில் மனதானது ஒன்றிபோய் சுயகட்டுப்பாட்டை இழக்கும் நிலையை உருவாக்குகிறது.*

*நேர்மறை பலன்:*

*நிலையான பொறுப்புகளில் அர்பணித்துக் கொள்வது, இல்லுலக பற்று, அடிமைத்தனம், சாராயம் மற்றும் லாகிரி வஸ்துகளுக்கு அடிமையாதல் ஆகியவற்றோடு தொடர்பு பெற்றுள்ளது.*

*தலைகீழ் பலன்:*

*பிறர் விரித்த வலையில் சிக்கிவிடுவது, காமத்தின் உந்துதலால் ஏற்படும் ஏக்கம், பேராசை, அறியாமை, கோபம், சர்வாதிகாரம், கொடுங்கோலாட்சி, ஆட்டிப்படைத்தல், பொருள் மற்றும் காமம் சார்ந்த விடாபிடி எண்ணம்.*

### *16.* இடிந்த கோபுரம்



இந்த துருப்புச்சீட்டு நிலையான தன்மையை தகர்ந்து விடுவதையும், எல்லாவற்றிலும் தடையை உண்டாக்குவது.

நேர்மறை பலன்:

மறுமதிப்பீடு, மறைக்க முடியாதது, வெளிபடுதல், தேவையான மாற்றம், கடவுளின் மறமுக ஆசீர்வாதம் ஆகியவற்றோடு தொடர்பு பெற்றுள்ளது.

தலைகீழ் பலன்:

விரும்பதகாத, எதிர்பார்க்காத திடீர் மாற்றம், வீழ்ச்சி, பேரழிவு ஆகியவற்றை குறிக்கும்.

### *17.* நட்சத்திரம்



நட்சத்திரமானது இருளில் பிரகாசிக்கும் ஒரு வழிகாட்டும் ஒளியாகும். இது நம்பிக்கை, எதிர்பாப்பு மற்றும் புதுப்பித்தலை குறிக்கிறது.

நேர்மறை பலன்:

நம்பிக்கை, ஆன்மீகம், சாந்தம், உத்வேகம் தாராள மனப்பான்மை, உண்மை அமைதி, மனதின் ஆசைகள் நிறைவேறுதல், நல்ல உடல் ஆரோக்கியம், ஆன்மீக விழிப்புணர்வு ஆகியவற்றோடு தொடர்பு பெற்றுள்ளது.

தலைகீழ் பலன்:

தன்நம்பிக்கையற்ற தன்மீதே சந்தேகம், நம்பிக்கை இல்லாமை, வெறுப்புணர்வு, மற்றும் எதிர்மறை எண்ணம்.

## 18. சந்திரன்



இந்த நிலவின் ஒளி அச்சத்தை ஏற்படுத்துகிறது. ஆழ்மனதில் புதைக்கப்பட்ட வலி மற்றும் வேதனைகளை குறிக்கிறது. இது பயணங்களில் ஏற்படும் கடுமையான சூழ்நிலைகளை சுட்டிக்காட்டுகிறது.

நேர்மறை பலன்:

கனவு, கற்பனை, ஆழ்மனம், எதிர்பாராத வாய்புகள் மற்றும் ஒளி ஏற்றுதல் ஆகியவற்றோடு தொடர்புடையது.

தலைகீழ் பலன்:

மாயை, பயஉணர்வு, பாதுகாப்பற்ற உணர்வு, அச்சம், மனக்குழப்பம், பொய்கள் மற்றும் ஏமாற்றத்துடன் தொடர்புடையது.

## 19. சூரியன்



சூரிய ஒளியானது பூமியில் உள்ள அனைத்து உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களின் மீதும் தனது ஒளியை படரச்செய்து இதமான மகிழ்ச்சியான வாழ்கையை நமக்கு அளிக்கிறது. அனைத்திற்கும் மூலமாக திகள்கிறது. இருட்டின் முடிவில் துவங்கும் ஒளியை சூரியன் ஏற்படுத்தி தருகிறது.

நேர்மறை பலன்:

மகிழ்ச்சி, சந்தோசம், மேன்மை அடைதல், உயிர்பிக்கும் தன்மை, வீரியம், போதனை, ஞானம், நல்ல உடல் நலம், காதல், முழுமை அடைதல் ஆகியவற்றோடு தொடர்பு பெற்றுள்ளது.

தலைகீழ் பலன்:

வெற்றிபெற முடியாத நிலை, தற்காலிக மனச்சோர்வு, தவரான தீர்ப்புகள், தாமதம், வீரியமற்ற, அதீத அகங்காரம் ஆகியவற்றோடு தொடர்பு பெற்றுள்ளது.

## 20. இருதித் தீர்ப்பு




இந்த துருப்புச்சீட்டு வாழ்வின் முடிவில் பெற்ற ஞானத்தையும் முடிவில் கொடுக்க பட்ட தீர்ப்பை ஏற்றுகொள்ள படுவதையும் சுட்டிக்காட்டுகிறது. தனது வாழ்கையின் அடுத்த கட்ட நிலையையும் புதிய உறவுகளையும் சுட்டிக்காட்டுகிறது.

*நேர்மறை பலன்:*

*தீர்ப்பு, மறுபிறப்பு, குற்றத்திலிருந்து விடுபடுவது, மகிழ்ச்சி, களிப்பு, புதிய ஆற்றல், முந்தய முயற்சிகளுக்கான தற்போது கிடைக்கும் வெகுமதி போன்றவற்றை சுட்டிக்காட்டுகிறது.*

*தலைகீழ் பலன்:*

*சுய பரிசோதனையை ஏற்றுகொள்ள முடியாத நிலை, தன்னை பற்றியே சந்தேகப்படுவது, குற்றஉணர்ச்சி, இழப்பு, சுயநிந்தனை, தாமதம், அடம்பிடித்தல், பிடிவாதம் போன்றவற்றை சுட்டிக்காட்டுகிறது.*

## 21. உலகம்




உலகமே இருதியானது. விரும்பிய அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றும் நிலை மற்றும் முடிவிலிருந்து புதிய துவக்கம். கனவுகள், நம்பிக்கைகள் மற்றும் ஆசைகள் நிறைவேறுவதை சுட்டிக்காட்டுகிறது.

*நேர்மறை பலன்:*

*ஒருங்கிணைப்பு, பயணம், செய்து முடித்தல், சாதனை, பூர்த்தி அடைதல், நிறைவு பெறுவது, திருப்தி, ஆனந்தம், முழுமையடைதல் மற்றும் வெற்றியை சுட்டிக்காட்டுகிறது.*


*தலைகீழ் பலன்:*

*தேக்கநிலை, பொறுமையை இழந்த நிலை, விருப்பமின்மை, முழுமை அடையாத நிலை, முழுமையாக முடிக்காத நிலை, அமைதியின்மை மற்றும் தாமதங்களை சுட்டிக்காட்டுகிறது.*

# துணை டாரட் துருப்புச்சீட்டுகளுகுண்டான நேர் மற்றும் தலைகீழாக வருவதால் பலன்கள்:

## 1. கோப்பைகள்:

### 1. ஒரு கோப்பை:




நேர்மறை பலன்:

காதல், இரக்கம், படைப்பாற்றல்,உணர்ச்சிபெருக்கம்.

தலைகீழ் பலன்:

காதலில் ஏமாற்றம், காதல் தோல்வி, மலட்டுத்தன்மை, கருச்சிதைவு, ஆன்மீக தொடர்பு துண்டிக்கபடுதல்.

### 2. இரண்டு கோப்பைகள்:



நேர்மறை பலன்:

காதலில் ஐக்கியமாதல், கூட்டு, கூட்டுச்சேர்க்கை, ஈர்ப்பு, ஒற்றுமை, சமத்துவம்.

தலைகீழ் பலன்:

உறவுகள் முறிவு, உறவில் சமநிலையின்மை, இணக்கம் இல்லாதது, மிகிழ்ச்சியில்லாத ஜோடி, பொருத்தமற்ற ஜோடி, காதலில் பிரிவு, விவாகரத்து.

### 3. மூன்று கோப்பைகள்:



நேர்மறை பலன்:

வளர்ச்சி, திருமணம், கொண்டாட்டம், நண்பர்கள், சந்தோச தருணங்கள், கூட்டு முயற்சி, வெகுமதி, பெண்கள் கூட்டும் கூட்டங்கள், படைபாற்றல்.

தலைகீழ் பலன்:

புறம் பேசுதல், நண்பர்களின் பிரிவு, வளர்ச்சியன்மை, கூட்டு முயற்சியின்மை, நட்பு போர்வையுலிருக்கும் எதிரி, கருச்சிதைவு.

4. **நான்கு கோப்பைகள்:**



நேர்மறை பலன்:

தியானநிலை, மனச்சோர்வு, சலிப்பு, பகல் கனவு காண்பது, தத்துவார்த்த எண்ணங்கள்.

தலைகீழ் பலன்:

சலிப்பு, யாருடனும் சேராதிருத்தல், வாய்ப்புகளை தவரவிடுதல்.

5. **ஐந்து கோப்பைகள்:**



நேர்மறை பலன்:

இழப்பு, வருத்தம், ஏமாற்றம், ஏமாற்றம், அநீதி.

தலைகீழ் பலன்:

நகர்ந்துவிடுதல், தற்போதய நிலையை ஏற்றுக்கொள்ளுதல்.

6. **ஆறு கோப்பைகள்:**



நேர்மறை பலன்:

மறு இணக்கம், பிரிந்த பின் இணைவது, பழங்கால நினைவுகள், குழந்தை பருவ நினைவுகள், வெகுளித்தனம்.

,

தலைகீழ் பலன்:

கடந்த கால நினைவுகளில் சிக்கியிருப்பது, மிக எளிமையான, உண்மை நிகழ்வுகளுக்கு எதிராக நினைப்பது.

7. **ஏழு கோப்பைகள்:**



நேர்மறை பலன்:

கற்பனை, மாயத்தோற்றம், விருப்பமானவற்றைத் தேர்ந்து எடுத்தல். பல விருப்பகளை பற்றிய எண்ண ஓட்டம்.

தலைகீழ் பலன்:

சபலப்படுதல், திசை திருப்பும் தந்திரங்கள்.

*8.* **எட்டு கோப்பைகள்:**



நேர்மறை பலன்:
தன்னை விடுவித்துக்கொள்ளுதல், கைவிடப்பட்ட நிலை, ஏமாற்றம், திரும்பப்பெறபடுதல்.

தலைகீழ் பலன்:
நம்பிக்கையற்ற நிலை, குறிக்கோள்ளற்ற, சறுக்கள், விலகிச்செல்லுதல்.

*9.* **ஒன்பது கோப்பைகள்:**



நேர்மறை பலன்:
ஆசைகள் நிறைவேறுதல், அனைத்து வித சுகம், மகிழ்ச்சி, சந்தோஷம், முழு திருப்தி, மனநிறைவு.

தலைகீழ் பலன்:
பேராசை, திருப்தியற்ற நிலை, அதீத பொருள் பற்று.

*10.* **பத்து கோப்பைகள்:**



நேர்மறை பலன்:
நல்லிணக்கம், மகிழ்ச்சி, ஒத்திசைவு, திருமணம், சந்தோஷம், சீரமைப்பு.

தலைகீழ் பலன்:
வீட்டைவிட்டு பிரிதல், திருமணத்தடை, விவாகரத்து, நல்லொழுக்கத்திலிருந்து தவறுவது.

*11.* **சேவகியின் கோப்பை:**




நேர்மறை பலன்:
தூதுவர், படைப்பாற்றல், அறிவு, புதிய தொடக்கங்கள், ஒருங்கிணைவு.

தலைகீழ் பலன்:
உணர்ச்சிகளை கட்டுபடுத்த முடியாத அளவிற்கு முதிர்ச்சியற்ற, படைப்பாற்றலில் தடை.

12. **போர்வீரனின் கோப்பை:**



நேர்மறை பலன்:

காதல், காமம், மயக்கும் அழகையுடைய, கற்பனைத்திறன், மின்னும் கவசத்தினுள் இருக்கும் போர்வீரன்.

தலைகீழ் பலன்:

உண்மை நிகழ்வுகளுக்கு எதிராக நினைப்பது, பொறாமைபடுவது, உற்சாகமற்ற நிலை.

13. **அரசியின் கோப்பை:**



நேர்மறை பலன்:

உணர்வுபூர்வமான பாதுகாப்பு, அமைதி, உள்ளுணர்வு மிக்க, இரக்கமுள்ள.

தலைகீழ் பலன்:

உணர்வுபூர்வமான பாதுகாப்பற்ற நிலை, மற்றவரிடம் சார்ந்து இருத்தல்.

14. **அரசனின் கோப்பை:**



நேர்மறை பலன்:

உணர்ச்சிகளை சமநிலையில் கையாளக்கூடிய, பெருந்தன்மை.

தலைகீழ் பலன்:

உணர்ச்சிகளை தூண்டி தான் நினைத்ததை செய்துமுடிப்பது, உற்சாகமற்று அமைதியாயிறுத்தல், எளிதில் வேறு நிலைக்கு மாறக்கூடிய.

## 2. நாணயங்கள்:

### 1. ஒரு நாணயம்:




நேர்மறை பலன்:

புதிய நிதி சேர்க்கை, நிலையான வருமானம், தன வரவு, வாய்ப்பு, அபிவிருத்தி, செழுமை, வளமை, எதிர் பாராத வாய்ப்பு, அதிர்ஷ்டம், வாரிசு, புதிய வேலை வாய்ப்பு, புதிய வியாபாரம், பாதுகாப்பான நிதி நிலை.

தலைகீழ் பலன்:

வாய்ப்பை இழத்தல், தன பற்றாகுறை, தவராக திட்டமிடல், தவராக கணித்தல், தடை மற்றும் தாமதப்படும் வரவேண்டிய நிதி, தனப் பற்றாக்குறை, தேவையற்ற முதலீடுகள், பாதுகாப்பற்ற நிதி நிலை, அதிக செலவீனங்கள், வேலையை இழத்தல், லஞ்சம்.

### 2. இரண்டு நாணயங்கள்:



நேர்மறை பலன்:

சமநிலை, சமன் செய்தல், இணங்குவது, நேர மேலாண்மை, முன்னுரிமை.

தலைகீழ் பலன்:

சீரற்ற நிர்வாகம், சீரற்ற மனநிலை, சீரற்ற தனநிலை, ஏற்ற இறக்கமான நிலை, நிலையற்ற வாழ்க்கை, தனநிலையினால் உண்டான மனச்சோர்வு.

### 3. மூன்று நாணயங்கள்:



நேர்மறை பலன்:

குழுவாக சேர்ந்து பணி செய்தல், கூட்டாக செயல்படுதல், ஆரம்ப நிலை பூர்த்தி அடைதல், கற்றுக்கொடுத்தல் மற்றும் கற்றுக்கொள்ளுதல், தொழில் பயிற்சி பெறுதல், கைவினைஞர், கட்டடக்கலை.

தலைகீழ் பலன்:

குழுவாக பணியில் தேக்கம், திறமையில் நன்மதிப்பை இழத்தல்.

### 4. நான்கு நாணயங்கள்:



நேர்மறை பலன்:

கட்டுப்பாடு, ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு, சேமிப்பு, உடைமை, பழமைவாதம், உரிமை கொண்டாடுதல், கொள்கை முதலானவற்றில் பெரும் மாறுதல்களை விரும்பாதிருத்தல், பழமைவாதம்.

தலைகீழ் பலன்:

பேராசை, அதீத பொருள் பற்று, சுயபாதுகாப்பு, பொறுப்பற்ற செலவு, தனமிழப்பு, பாதுகாப்பற்ற தனம், பழமைவாதத்திலிருந்து விடுபடுவது.

### 5. ஐந்து நாணயங்கள்:



நேர்மறை பலன்:

தனிமை, பாதுகாப்பின்மை, கவலை, நிதி இழப்பு, வறுமை, வீடில்லாத நிலை, பற்றாகுறை, ஆன்மீகப்பற்று மற்றும் கடன்.

தலைகீழ் பலன்:

நிதி இழப்பிலிருந்து மீழ்தல், ஆன்மீக பற்று அற்ற நிலை, கஷ்ட காலத்திலிருந்து விடுபடல், கடனை அடைத்தல், பொருளாதார முன்னேற்றம், கடந்த கால தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளுதல்.

### 6. ஆறு நாணயங்கள்:



நேர்மறை பலன்:

தாராள மனப்பான்மை, சமூக நலம், உதவி, நன்கொடை, தொண்டு, செழிப்பு, செல்வத்தை பகிர்ந்து கொள்ளுதல், விநியோகம் செய்தல், உபயதாரர் (sponsor).

தலைகீழ் பலன்:

கடன், ஒருதலை பட்சமான உபயம் அல்லது நங்கொடை கிடைத்தல், சுயநலம்.

7. **ஏழு நாணயங்கள்:**



நேர்மறை பலன்:

அறுவடைக் காலம், விடாமுயற்சியுடன் கவனமாக பார்த்துக்கொள்ளுதல், கரு வளரும் காலம், முதலீடு, முதலீடு முதிர்ச்சி பெறும் காலம், லாபம், வெகுமதி, பரிசு, பயனளித்தல்.

தலைகீழ் பலன்:

தொலை நோக்கு பார்வையற்ற, முதலீடு முதிர்ச்சி அடையும் முன்பே முதலீட்டை ரத்து செய்தல், முதலீட்டிலிருந்து சொர்ப்ப பணம் கிடைத்தல், களைச்செடி, குறைந்த அளவு லாபம்.

8. **எட்டு நாணயங்கள்:**



நேர்மறை பலன்:

கைவினைஞர், கடின உழைப்பு, திறமைவாய்ந்த நிபுணர், செய்யும் வேலையில் கவனம், தரமான, எண்ணக்குவியம், பொறுப்பு, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தன்னை அர்ப்பனித்துக் கொள்ளுதல்

தலைகீழ் பலன்:

அர்ப்பனிப்பில்லாமை, ஆர்வமின்மை, கவனமின்மை, குவியமின்மை, தரமில்லாத தயாரிப்பு, பொறுமையற்ற.

9. **ஒன்பது நாணயங்கள்:**



நேர்மறை பலன்:

வெற்றி, லாபம், தன்னிறைவு, அளவிற்கு அதிகமாக, எதிர்பார்ப்பை விட அதிகமாக, ஆடம்பரம், நன்றியுணர்வு, உச்சநிலை, வளமை.

தலைகீழ் பலன்:

கருணையற்ற, வேலை பழுவில் இருத்தல், பொருளாதார பின்னடைவுகள், ஓய்வு எடுக்கமுடியாத நிலை, ஏமாற்றம், ஒழுக்கமற்ற.

*10.* **பத்து நாணயங்கள்:**




*நேர்மறை பலன்:*

*மேம்பட்ட பொருளாதார நிலை, பரம்பரை, குடும்ப அமைப்பு, அந்தஸ்து, புகழ், பதவி உயர்வு, வெகுமதி, நிலம், சொத்து, வீடு, குடும்பச்சொத்து, பணி ஓய்வு, ஓய்வூதியம், ஆடம்பரம், சுகம் மற்றும் ஸ்தாபனத்தை நிறுவுதல்.*

*தலைகீழ் பலன்:*

*தனிமை, இழப்பு, தன இழப்பு, பொருளாதார வீழ்ச்சி, மிகப்பெரிய இழப்பு, பெரும் கடன், சரியில்லாத வணிக மேலாண்மை, குடும்பத்தில் ஒற்றுமையிண்மை.*

*11.* **சேவகியின் நாணயம்:**




*நேர்மறை பலன்:*

*மாணவர், வெளிப்படையான, புதிய தன வருவாய்கான வாய்ப்பு, புதிய வேலைவாய்ப்பு, முடிவுகளுக்காக காத்திருத்தல், தொலைநோக்குத்திட்டம்.*

*தலைகீழ் பலன்:*

*முன்னேற்றம் இல்லாதது, திட்டமிடாமை, குறுகிய கால திட்டம், கல்லூரி படிப்பை பாதியில் கைவிடுதல்.*

*12.* **போர்வீரனின் நாணயம்:**




*நேர்மறை பலன்:*

*லாபகரமான, லட்சியவாதி, எதிர்கால முதலீடு, மிகப்பாதுகாப்பான, மெதுவாக நகரக்கூடிய, நடைமுறைக்கு ஏற்ப, பழமைவாதம்.*

*தலைகீழ் பலன்:*

*தன இழப்பு, சோம்பேரித்தனமான, சலிப்பு ஏற்படுதல், நின்றுபோதல், சிக்கிக்கொள்ளுதல்.*

### 13. அரசியின் நாணயம்:




நேர்மறை பலன்:

தாய்மை, நடைமுறை, திட்டவட்டமான ஒழுங்கு முறை உடைய, குடும்பத்துப்பெண், முதிர்ந்த நில மங்கை, போஷாக்குடன் பராமரித்தல், நம்பிக்கைகுறிய, குணமக்கக்குடிய.

தலைகீழ் பலன்:

சுயநலம், வேலையில் ஸ்திரமின்மை, துஷ்ட செயல் புரிபவர், நிதி பற்றக்குறை, வளைந்து கொடுக்காத.

### 14. அரசனின் நாணயம்:




நேர்மறை பலன்:

பாதுகாப்பு, அதிகாரம், கட்டுப்பாடு, ஒழுக்கம், பெரு வளம், ஆடம்பரமான, வியாபாரம், வர்த்தகம் மற்றும் தொழிலில் வெற்றிகரமான போக்கு,

தலைகீழ் பலன்:

வியாபாரம், வர்த்தகம் மற்றும் தொழிலில் சரிவு, ஆணவம் மற்றும் அகந்தையுடன் அதிகாரம் செலுத்துதல், இரக்கமற்ற.

## 3. வாள்கள்:

### 1. ஒரு வாள்:




நேர்மறை பலன்:

வெற்றி, அதிகாரம், தகவல் தொடர்பு, பகுப்பாய்வு, மனத்தெளிவு, காரணகாரியத்துடன் செயல்படுவது.

தலைகீழ் பலன்:

சந்தேக புத்தி, நிலையற்ற மனது, குழப்பமான மன நிலை, வேதனை, ஒழுக்கமின்மை, தூக்கமின்மை.

### 2. இரண்டு வாள்கள்:




நேர்மறை பலன்:

இக்கட்டான நிலை, வாய்ப்புகள், முடிவெடுக்க இயலாத நிலை.

தலைகீழ் பலன்:

எதைக்கண்டும் பயப்படும் நிலை, மனது மற்றும் உணர்வுகளில் குழப்பமான மனநிலை.

### 3. மூன்று வாள்கள்:



நேர்மறை பலன்:

வலி நிறைந்த பிரிவு, துக்கத்தின் வெளிப்பாடுதவராக புரிந்துகொள்ளும் நிலை, கருத்துவேறுபாடு, அறுவை சிகிச்சை.

தலைகீழ் பலன்:

வலியிலிருந்து விடுபடுவது, மன்னித்தல், நம்பிக்கை ஏற்படுதல்.

***4. நான்கு வாள்கள்:***



நேர்மறை பலன்:

தியான நிலை, மருத்துவமனையில் அனுமதிக்கபட்ட நிலை, சரணாலயம், மனச்சோர்வு, தனிமை.

தலைகீழ் பலன்:

தனிமையிலிருந்து விடுபடல், மெதுவாக குணமடையதல், தூக்கமற்ற நிலை, சிறயிலிருந்து திரும்பி வருதல், இறந்த நிலைக்கு சென்று திரும்புதல்.

***5. ஐந்து வாள்கள்:***



நேர்மறை பலன்:

மோதல், துரோகம், வீழ்த்துதல், இழப்பு, மனபதட்டம், சரணடைதல், தாக்குதல், போர், வன்முறை.

தலைகீழ் பலன்:

மோதலிலிருந்து வெளியேறுதல், யுத்தத்தை நிறுத்துதல், சமரச பேச்சு.

***6. ஆறு வாள்கள்:***



நேர்மறை பலன்:

வருத்தம் தோந்த மனதோடு கூடிய இடமற்றம், தப்பித்துக்கொள்வது, நீர் நிலையில் பயணம்.

தலைகீழ் பலன்:

செல்லமுடியாத நிலை, முன்னேற்றமில்லா நிலை, நீரில் மூழ்குதல், படகுச்சவரியில் ஏற்படும் விபத்து.

***7. ஏழு வாள்கள்:***



நேர்மறை பலன்:

தந்திரம், திருடுதல், ஒற்றன், தப்பித்தல், அபாயம், தைரியமான, மோசடி.

தலைகீழ் பலன்:

கோழைதனமான, நம்பிக்கையற்ற, விளைவுகளை எதிர்கொள்ள இயலாமை.

***8. எட்டு வாள்கள்:***



நேர்மறை பலன்:

சிறைவாசம், தனிமைபடுத்தப்படல், அதிகாரமற்ற நிலை, பேரிடர், அடிமை, பக்கவாதம், நம்பிக்கையற்ற, மனரீதியான பாதிப்புகள், அச்ச வெறி.

தலைகீழ் பலன்:

சுதந்திரம், விடுதலை, மனதில் தெளிவு ஏற்படுதல், புதிய கண்ணோட்டத்தில் பார்த்தல்.

***9. ஒன்பது வாள்கள்:***



நேர்மறை பலன்:

மனபதட்டம், மன அழுத்தம், துயரம், சூழ்நிலையை எதிர்கொள்ளமுடியாத மனம், தூக்கமின்மை, ஒற்றைதலைவழி.

தலைகீழ் பலன்:

மன அழுத்ததிலிருந்து குணமடைதல், நம்பிக்கையற்ற, இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வறுதல்.

### 10. பத்து வாள்கள்:



நேர்மறை பலன்:

முதுகில் குத்தப்படுதல், தேற்கடிக்கப்படுதல், துரோகம், உளவியல் ரீதியான மாற்றம், நெருக்கடி நிலை, ஒரு புதிய தொடக்கத்திற்கு முன் ஏற்படும் முடிவு.

தலைகீழ் பலன்:

மீண்டுவருதல், புதுபித்துக்கொள்ளுதல், அழிவை பற்றிய அச்சம், மறுபிறப்பு, இறப்பு நிலைக்கு சென்று திரும்புதல்.

### 11. சேவகியின் வாள்:




நேர்மறை பலன்:

சாதூர்யம், ஆர்வம் மிக்க, மிகுதியான பேச்சு, சுறுசுறுப்பான, எச்சரிக்கையாக இருத்தல், விழிப்புடன் இருத்தல்.

தலைகீழ் பலன்:

அவசரம், நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள், செயல்படுத்தப்படாத விவாதம், விரோதம், சாத்தியமற்ற.

### 12. போர்வீரனின் வாள்:




நேர்மறை பலன்:

விரைந்து செயல்படக்கூடிய, செயல்கள் தொடர்பான, தகவல் தொடர்பு, துரிதமாக செயல்படுதல், ஒரு நிலை படுத்தப்பட்ட மனது.

தலைகீழ் பலன்:

சிதறிய சிந்தனைகள், முன் விளைவுகளுக்கான அவமதிப்பு, அடியாள், மிகையான அகங்காரம்.

### *13. அரசியின் வாள்:*




*நேர்மறை பலன்:*

*ஒழுங்குபடுத்துதல், சுயமான செயல்பாடு, சுய ஒழுக்கம், நேர்த்தியான, பகுத்தறியும் திறன்மிக்க, கச்சிதமான.*

*தலைகீழ் பலன்:*

*அதிகமாக உணர்ச்சிவசப்படுதல், அக்கறையற்ற, அன்பில்லாத, நம்பிக்கையற்ற.*

### *14. அரசனின் வாள்:*




*நேர்மறை பலன்:*

*அதிகாரம் நிறைந்த, தெளிந்த சிந்தனை, உண்மை, அதீத அறிவு சார்ந்த ஆற்றல் பெற்றவர், நெறிமுறைகள்.*

*தலைகீழ் பலன்:*

*கொடுங்கோன்மை, அடக்கியாளுதல், வன்முறை, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தல்.*

## 4. மரக்கோள்கள்:

### 1. ஒரு மரக்கோள்:




நேர்மறை பலன்:

உத்வேகம், ஆற்றல், சக்தி, உருவாக்குதல், புதிய தொடக்கங்கள், வீரியமிக்க, திறனுடைய, ஆக்க அறிவு.

தலைகீழ் பலன்:

தாமதங்கள், ஊக்கமின்மை, பின்னடைவுகள், வளர்ச்சியற்ற, போலியான, உற்சாகமற்ற.

### 2. இரண்டு மரக்கோள்கள்:



நேர்மறை பலன்:

கண்டுபிடித்தல், எதிர்கால திட்டங்களை வகுத்தல், தீர்மானங்கள், கடல்கடந்த பயணம், தொழில் சார்ந்த கூட்டு, வெளிநாடுகளில் விரிவுபடுத்துதல்.

தலைகீழ் பலன்:

முறையாக திட்டமிடாமை, அறியாதவற்றை நினைத்து பயம், பயணத்தில் தாமதம், தீர்மானத்திற்கு வரமுடியாதிருத்தல்.

### 3. மூன்று மரக்கோள்கள்:



நேர்மறை பலன்:

தேவையான முன்னேற்பாடுகளுடன் செயல்படுதல், தொலைநோக்கு பார்வை, விரிவாக்கம், தன்னம்பிக்கை, முயற்சி பயனளித்தல், தொலைதூர தொடர்புகள்.

தலைகீழ் பலன்:

தாமதங்கள் மற்றும் பின்னடைவுகள், பயணங்களில் தாமதம், தொலைநோக்கு பார்வையின்மை, நீண்டகால லட்சியங்களில் தடைகள்.

4. **நான்கு மரக்கோள்கள்:**



நேர்மறை பலன்:

நிலைப்புத்தன்மை, வளம், வெற்றி, மகிழ்ச்சி கொண்டாட்டங்கள், கேளிக்கை விருந்து, லட்சியங்களை அடைதல், பெருமை, விடுதலை, புதுப்பித்தல், திருமணம், நல்லிணக்கம், வீடு, சமூக கூட்டங்கள், சாதனைகள், குழுப்பணி.

தலைகீழ் பலன்:

வீட்டைவிட்டு வெளியேறுதல், சாதனைகளுக்கு தடைகள், கட்டுப்பாடுகள், திருமணத்திற்கு பின் ஏற்படும் பிரச்சனைகள், குழுவாக செயல்படாமை.

5. **ஐந்து மரக்கோள்கள்:**



நேர்மறை பலன்:

கலகம், குழப்பம், போராட்டம், கருத்து வேறுபாடு, போட்டி, உடன்படாது இருத்தல், பதற்றம், சச்சரவு.

தலைகீழ் பலன்:

மோதலை தவிர்த்தல், இலக்குகளின் மீது கவனம், ஒத்துழைப்பு, சமரசம், தீர்வு ஏற்படல், போட்டியின்மை.

6. **ஆறு மரக்கோள்கள்:**



நேர்மறை பலன்:

வெற்றி, பொது அங்கீகாரம், முன்னேற்றம், தன்னம்பிக்கை, விருதுகள், புகழ், பிரபலம், பதவி உயர்வு, தலைமை தாங்குதல்.

தலைகீழ் பலன்:

தன்நம்பிக்கையற்ற, புகழிலிருந்து வீழ்ச்சி அடைதல், நன்மதிப்பை இழத்தல்.

### 7. ஏழு மரக்கோள்கள்:




நேர்மறை பலன்:

சவால்கள், போட்டி, விடாமுயற்சி, சகிப்புத்தன்மை, எதிர்ப்புசக்தி, எதிர்த்து நிற்கும் திறன், உறுதியன, தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய,

தலைகீழ் பலன்:

முயற்சியை கைவிட்டுவிடுவது, அதிகப்படியான பாதுகாப்பு, தைரியமின்மை, சக்தியற்ற நிலை.

### 8. எட்டு மரக்கோள்கள்:



நேர்மறை பலன்:

வேகம், துரிதமான செயல்பாடு, செயலில் இறங்குதல், வான்வெளிப்பயணம், இயங்குதல், துரித மாற்றம், தீர்வு, முடிவு தெரிதல், வழுவான நிலை, பிரட்ச்சனைகள் அற்ற நிலை, புகழ்.

தலைகீழ் பலன்:

தாமதங்கள், ஏமாற்றம், விரக்தி, நிறுத்தி வைத்தல், முழுமை அடையாத, வலுவிழந்த, பொறுமையற்ற, மன அழுத்தம், விரக்தி.

### 9. ஒன்பது மரக்கோள்கள்:



நேர்மறை பலன்:

விடாப்பிடியான, உறுதியான, பொறுமை, தாக்குப்பிடிக்கும் திறன், அனுபவம் மிகுந்த, நிலைத்து நிற்கும் தன்மை, தேசபற்று, சுயபரிசோதனை.

தலைகீழ் பலன்:

தயக்கம், தற்காப்பு, சந்தேக குணம், பழைய தவறுகளில்லிருந்து தன்னை திருத்திக்கொள்ளாத நிலை, தேக்க நிலை.

### 10. பத்து மரக்கோள்கள்:



நேர்மறை பலன்:

அதிகப்பளு, சுமை, பொறுப்புகள், கடின உழைப்பு, மன அழுத்தம், சாதனை, சவால்கள் நிறந்த நேரம்.

தலைகீழ் பலன்:

பொறுப்பை தவிர்த்தல், வலுவிழந்த, அதிகாரமற்ற, பயம், கடைசி நேரத்தில் துரிதமான செயல்பாடு.

### 11. சேவகியின் மரக்கோள்:




நேர்மறை பலன்:

உற்சாகமான மனநிலை, ஆராய்தல், கண்டுபிடிப்பு, புதுமையான, ஆக்க அறிவு, தொழிலதிபர், தன்னம்பிக்கை, தைரியம், இளமையான, நேர்மறை எண்ணம்.

தலைகீழ் பலன்:

புதிய யோசனைகளுக்கு பின்னடைவுகள், சரியான பாதையை தேர்ந்து எடுக்க இயலாமை, அவநம்பிக்கை. விரக்தி, இலக்கு அற்ற, சுதந்திரமற்ற, பயணத்தை நினைத்து பயம் மற்றும் பயணத்தில் தாமதம்.

### 12. போர்வீரனின் மரக்கோள்:




நேர்மறை பலன்:

ஆற்றல், ஆர்வம், காமம், செயல்படுத்துதல், சாகசம், மன இறுக்கம், பரபரப்பான வாழ்க்கை, நேரமின்மை, பயமறியான், பாதுகாவலன், தன்நம்பிக்கையுடைய.

தலைகீழ் பலன்:

அவசரமாக முடிவெடுத்தல், சிதறிய ஆற்றல், தாமதங்கள், ஏமாற்றம் மற்றும் விரக்தி, பொறுப்பற்ற, சுய ஒழுக்கமற்ற, முரட்டு குணமுள்ள.

### *13. அரசியின் மரக்கோள்:*




*நேர்மறை பலன்:*

*அதிகாரமுள்ள, சக்திவாய்ந்த, தீர்மானித்தல், குறிக்கோளுடைய, கவர்ச்சிகரமான, அளவுக்கு மீறிய வளம், உல்லாசம், சுந்தரமான, மனக்கண்ணால் எல்லாவற்றையும் காணும் திறன் (Clairvoyance), தன்னம்பிக்கை.*

*தலைகீழ் பலன்:*

*வலுச் சண்டைக்குப் போதல், பலவீனமான, சண்டித்தனம், சுயநலம், சக்தியற்ற நிலை, அர்பணிப்பற்ற நிலை.*

### *14. அரசனின் மரக்கோள்:*




*நேர்மறை பலன்:*

*இயல்பிலேயே தலைமை தாங்கும் பண்பையுடையவர், தொழில் அதிபர், உயர்ந்த லட்சியங்களையுடையவர், பெறுமதிப்பு மற்றும் கவிரவத்திற்குறிய நபர், ஆட்சியாளர், முதலாளி, கவர்ந்திளுக்கும் தன்மையை உடைய, சுயமதிப்புடைய.*

*தலைகீழ் பலன்:*

*அவசரமாக முடிவெடுக்கும் தன்மை, இரக்கமற்ற, அதிக எதிர்பார்ப்புகளையுடைய, முதிர்ச்சியற்ற மனம், சர்வாதிகாரத்தன்மை, நம்பகத்தன்மையற்ற, போட்டியில் ஜெயிக்க முடியாத நிலை.*

## துருப்புச்சீட்டுகளில் காணப்படும் சின்னங்களும் அதன் பலன்களும்:

1. **தேவதை:**



தேவதைகள் தெய்வீக செய்திகளைக் குறிக்கின்றன. அவர்கள் முக்கியமான தகவல்களின் தூதர்கள்.

2. **வளைவுகள்**:



வளைவுகள் மற்றும் பாதை-வழிகள் சுட்டிக்காட்டுவது புதிய வாய்ப்புகள் மற்றும் துவக்கங்களுக்கான அடையாளமாக கருதப்படுகிறது .

3. **கவசம்**:



பாதுகாப்பு, தயார்நிலை, வலிமையை சுட்டிக்காட்டுகிறது.

4. **இருக்கை**:



எடுக்கப்பட்ட முடிவுகளை சீர்தூக்கி பார்க்க சிறிது நேரம் எடுத்துக்கொள்வது. உட்கார்ந்து ஓய்வெடுத்து தாம் எடுத்த முடிவுகளை சீர்தூக்கி பார்த்தலை இருக்கை சின்னம் சுட்டிக்காட்டுகிறது.

5. **படகு**:



படகு சின்னமானது பயணம் மற்றும் இயக்கத்தை சுட்டிக்காட்டுகிறது. ஆழ்மனதில் அழுத்தமாக பதிந்துள்ள எண்ணங்களை சுட்டிக்காட்டுகிறது.

6. **எருது**:



எருது சின்னமானது உயர் அதிகாரம், ராஜ பதவி, ஸ்திரத்தன்மை, படை மற்றும் திறனை சுட்டிக்காட்டுகிறது.

7. **குழந்தைகள்:**



குழந்தைகள் சின்னமானது சத்தியம், வாக்குறுதி, நம்பிக்கை, புதிய துவக்கங்கள், புதிய தொடக்கங்களை சுட்டிக்காட்டுகிறது.

8. **மீன்**:



மீன் குறியீடானது உணர்ச்சி, உள்ளுணர்வு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகிறது.

9. **பூக்கள்**:



பூக்கள் குறியீடானது அழகு, மகிழ்ச்சி, சந்தோஷம், திறந்த நிலை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகிறது.

10. **இதயம்**:



இதயம் குறியீடானது அன்பு, சந்தோஷம், பாசம், மகிழ்ச்சி, உண்மை, தைரியம் மற்றும் மனசாட்சி ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகிறது.

11. **சங்கிலி**:



ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள், கட்டுப்பாடுகள், அடிமை மற்றும் மோதலை சுட்டிக்காட்டுகிறது.

12. **நகரம் மற்றும் கிராமம்**:



மக்கள் கூடுமிடங்கள், கருத்துக்கள், ஆற்றல்கள், ஒரு பொது இலக்கை அடைய கூடும் மக்கள், பாதுகாப்பு, இணக்கமான சூழல் மற்றும் குழுவாக செய்யப்படும் வேலைகளை சுட்டிக்காட்டுகிறது.

13. **கை**:



சக்தி, ஆற்றல், ஆதிக்கம் செலுத்துதல், பாதுகாப்பு, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டுசேர்ப்பது, கொடுப்பது மற்றும் பெறுவதைச் சுட்டிக்காட்டுகிறது.

14. **விளக்கு**:



ஒளியூட்டப்படுதல், அறிவு, உண்மை, ஆன்மீகச் சின்னம், நல்லொழுக்கம், நற்குணம், நம்பிக்கை மற்றும் கண்காணிப்பை சுட்டிக்காட்டுகிறது.

15. **லில்லி மலர்**:



தூய்மை, அப்பாவித்தனம், வெகுளித்தனம், சுதந்திரம், வளர்ச்சி, மேம்பாடு, முன்னேற்றம், உயர்வு மற்றும் கருவுறுதலைச் சுட்டிக்காட்டுகிறது.

16. **பல்லி**:



புதுப்பித்தல், பார்வை, ஞானம், மறுபிறப்பு ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறது.

*17.* ***சந்திரன்:***



அமானுஸ்ய சக்திகள், வாழ்க்கை சுழற்சி, காலம், தக்க சமையம், பிரதிபலிப்பு, வாழ்க்கை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவதை சுட்டிக்காட்டுகிறது.

*18.* ***மலை:***



வெற்றி, சந்தித்த சவால்கள், முயற்சி செய்து இழக்கை அடைதல், கால அளவிற்குட்படாதவை ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறது.

*19.* ***குதிரை:***



ஆற்றல், இயக்கம், செயல்படுவது, வீரியம், சக்தி, நடந்து கொண்டிருக்கும் செயல் ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறது.

*20.* ***ஊதுகுழல்:***



அறிவிப்பு, சந்தோசம் நிறைந்த, கூச்சல் மிக்க, மூர்க்கத்தனமான வெற்றிக்காண அறிவிப்பு ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறது.

*21.* ***சாவி:***



ஞானம், அறிவு, புத்திக்கூர்மை, மறைத்து வைத்திருக்கும் பொருட்களை திறந்து காட்டும் சாவி, ஆன்மிக ஞானம் ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறது.

*22.* ***சிங்கம்:***



தைரியம், ராஜ பதவி, வலிமை, ஆற்றல், பாதுகாப்பு ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறது.

*23.* ***மாதுளம் பழம்:***



மிகுதி, பெரும் வளம், கருவுருதல், குழந்தைப்பிறப்பு பெருந்தன்மை, தீஞ்சுவை, கூட்டு, இருமன இணைவு ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறது.

*24.* ***நட்சத்திரம்:***



இருள் நீக்குதல், திசை காட்டுதல், வழிகாட்டுதல் ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறது.

*25.* ***சூரியன்:***



விரிவாக்கம், வளர்ச்சி, ஆற்றல், படைப்பாற்றல், புதிய தொடக்கம் ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறது.

## டாரோ துருப்புச்சீட்டுகளை கலக்கும் முறைகள்

**டாரோ அட்டைகளை வெட்டி வைக்கும் முறை:**

வெல்வெட் துணியை மேஜையின் மீது விரித்து டாரோ அட்டைகளை மூன்று பங்காக வெட்டி வைத்து நடுவில் வெட்டிவைத்த அட்டைகளை முதலில் எடுத்து கடைசியில் வெட்டி வைத்த அட்டைகளை அதற்கு அடியிலும் முதலில் வெட்டி வைத்த அட்டைகளை அதற்கு அடியிலும் கலந்து வைக்க வேண்டும்.

**டாரோ அட்டைகளை கலக்கும் முறை:**

டாரோ அட்டைகளை சீட்டு கட்டு கலப்பது போல் கலக்கலாம் அல்லது டாரோ அட்டைகளை இரண்டு சம அளவு உள்ளவாறு பிரித்து வலது பக்கம் மற்றும் இடது பக்கம் வைத்து இரண்டு பங்கையும் ஒருசேர இடது முதல் அட்டையாகவும் வலது பக்க அட்டை இரண்டாவதாகவும் வருமாறு கலக்க வேண்டும். இவ்வாரே 78 அட்டைகளையும் கலக்க வேண்டும்.

## டாரோ அட்டைகளை அமைக்கும் (விரிக்கும்) பலன் காணும் முறைகள்

**ஒரு அட்டை விரிப்பு:**

வெட்டி வைத்தல் மற்றும் கலக்கும் நிலைக்கு பின்னர் வெல்வெட் துணியை மேஜையின் மீது வைத்து அட்டை பக்கம் தெரியுமாறு டாரோ அட்டைகளை அரைவட்ட வடிவில் விரித்து இடது கையால் ஒரு அட்டையை மட்டும் எடுத்து வைத்து பின் வலது கையால் அந்த அட்டையை திருப்பி என்ன அட்டை வந்துள்ளதோ அந்த அட்டைக்குறிய பலனை பலன் கேட்க வந்தவரிடம் கூற வேண்டும்.

### இறந்த கால, நிகழ்கால, எதிர்கால விரிப்பு:

வெட்டி வைத்தல் மற்றும் கலக்கும் நிலைக்கு பின்னர் வெல்வெட் துணியை மேஜையின் மீது வைத்து அட்டை பக்கம் தெரியுமாறு டாரோ அட்டைகளை அரைவட்ட வடிவில் விரித்து ஒன்றன் பின் ஒன்றாக இடது கையால் மூன்று அட்டைகளை எடுத்து முதல் அட்டையை இடது புறமும் இரண்டாம் அட்டையை நடுவிலும் மூன்றாம் அட்டையை வலது புறமும் வைக்க வேண்டும். இடது புறம் உள்ள அட்டை இறந்த காலத்தையும் நடுவிலுள்ள அட்டை நிகழ்காலத்தையும் வலதுபுற அட்டை எதிர்காலத்தையும் சுட்டிக்காட்டும். வலது கையால் அந்த அட்டைகளை திருப்பி என்ன அட்டை வந்துள்ளதோ அந்த அட்டைக்குறிய பலனை பலன் கேட்க வந்தவரிடம் கூற வேண்டும்.

### இராசி பலன் கூறும் விரிப்பு:

வெட்டி வைத்தல் மற்றும் கலக்கும் நிலைக்கு பின்னர் வெல்வெட் துணியை மேஜையின் மீது வைத்து அட்டை பக்கம் தெரியுமாறு டாரோ அட்டைகளை அரைவட்ட வடிவில் விரித்து ஒன்றன் பின் ஒன்றாக இடது கையால் பன்னிரெண்டு அட்டைகளை எடுத்து வைக்க வேண்டும். முதலில் எடுத்த அட்டை மேஷத்தையும் இரண்டாம் அட்டை ரிஷபத்தையும் குறிக்கும். இவ்வாராக மேசம் முதல் மீனராசி வரை 12 அட்டைகளையும் வலது கையால் திருப்பி என்ன என்ன அட்டைகள் வந்துள்ளதோ அந்த அட்டைக்குறிய பலனை பலன் கேட்க வந்தவரிடம் கூற வேண்டும்.

### ஏழு சக்கர விரிப்பு:

தனக்காக அல்லது பலன் கேட்க வந்தவரின் உடலில் உள்ள மூலாதார சக்கரத்தை மனதில் நினைத்து முதல் அட்டையை எடுக்க வேண்டும். சுவாதிஸ்டான சக்கரத்தை நினைத்து இரண்டாம் அட்டையையும் மனிப்பூரகத்தை நினைத்து மூன்றாம் அட்டையையும் அனாகதத்தை நினைத்து நான்காம் அட்டையையும் விசுத்தி சக்கரத்தை

*நினைத்து ஐந்தாம் அட்டையையும் ஆகினையத்தை நினைத்து ஆராம் அட்டையையும் சகசரா சக்கரத்தை நினைத்து ஏழாம் அட்டையையும் எடுத்து அடுக்கி திருப்பி வலது கையால் திருப்பி என்ன என்ன அட்டைகள் வந்துள்ளதோ அந்த அட்டைக்குறிய சக்கரங்களின் நிலைகளை பலன் கேட்க வந்தவரிடம் கூற வேண்டும்.*